[2nd November 1966

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்தச் சலுகை அளிக்கப்படுகிற விவரத்தைப் பார்க்கிற நேரத்தில், 'இறந்துபோன பிள்ளைவழிப் பேரன் பேத்திகள் ஆகியோர்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்களோடு இந்தச் சலுகை முடிவடைந்துவிடுமா அல்லது பரம்பரையாக இந்தச் சலுகை நீடிக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பரம்பரையாக இது நீடிக்கப்படமாட்டாது.

**திரு. கே. டி கோசல்ராம் :** கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்தும், இந்த அறிக்கையிலிருந்தும், பல பேர்களுக்கு இந்த ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது. இந்தக் காரணத்தினால், நிதி ஒதுக்கல் போதுமா என்று குறிப்பிடப்படுவதால், அதற்குரிய நிதியை ஒதுக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே விடை அளித்தேன். நிதி போதாது என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும்பொழுது, மேலும் வேண்டிய நிதியைச் சில சமயங்களில் அரசாங்கம் அனுமதித்து ஒதுக்குகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஆண்டுதோறும் இந்த வகைக்காக மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது என்ற விவரம் சொல்ல முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

## *District Educational Officers.*

* 305 *Q.*—SRI M. S. SELVARAJAN :
SRI GOMATHI SANKARA DIKSHITHAR : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of posts of District Educational Officers that are vacant and the dates from which they are vacant; and

(*b*) the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Three as on 31st July 1966.

*District Educational Officer, Tiruvannamalai.*—Vacant from 24th June 1966 consequent on the appointment of the incumbent as Special Officer for School Meals Programme.

*District Educational Officer, Madurai.*—Vacant from 1st July 1966 consequent on the promotion of the incumbent as Principal.

*District Educational Officer, Saidapet.*—Vacant from 16th July 1963 consequent on the promotion of the incumbent as Divisional Inspector of Schools.

2nd November 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஜில்லா முழுவதற்கும் கல்விக்கு பொறுப்பாக இருக்கக்கூடிய இந்த அதிகாரிகள் ஸ்தானங்கள் பல மாதங்கள் காலியாக இருப்பதற்கு நியாயம் இல்லை. தகுந்த அளவுக்கு டெப்யூடி இன்ஸ்பெக்டர்களுக்கு பிரமோஷன் கொடுப்ப தற்கு தாமதம் ஏற்படுவதற்கு வேறு விசேஷ காரணம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நீண்ட காலமாக இது குறித்து தாமதம் ஏற்பட்டு, இந்த ஸ்தானங்களைக் காலியாக வைத்துக் கொள்வதற்கு நியாயம் இல்லை என்று நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மேல் பதவிக்குப் பிரமோஷன் செய்வது பரிசிலனை செய்ய வேண்டிய விஷயம். பரிசீலனை செய்வதிலே சில சமயங்களில் தாமதம் ஏற்படுகிறது. இலாகாவினர் சொல்வதற்கும், இங்கே அரசாங்க இலாகாவிலே சொல்வதற்கும் வித்தியாசம் இருந்தால், தாமதம் ஏற்படுகிறது. ஆனால் கூடிய சீக்கிரம் இந்தக் காலி ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இப்பொழுது குறிப்பிட்ட மூன்று ஸ்தானங்களும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன.

திரு. சா. கணேசன் : இன்ஸ்பெக்டர்ஸ் போன்ற உத்தியோகஸ் தர்களை பிரமோஷன் செய்வதற்குத் தாமதம் அல்லது அவர்களுக்கு உரிய தகுதி பூரணமாகப் போதாது என்ற கருத்தில் அரசாங்கம் இருக்குமானால், பல்வேறு கலைத் துறைகளில், கல்லூரிகளில் அல்லது வேறு பள்ளிகளில் இருக்கிற தகுதி நிரம்பியவர்களை நேரடியாக இந்த ஸ்தானங்களுக்குப் பொறுக்கி எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அப்படி ஏதாவது ஏற்பாடு செய் திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படித்தான் அரசாங்கம் ஏற்பாடு செய்து நடத்திக்கொண்டு வருகிறது.

*District Boards School Assistants*

* 306 Q.—Sri M. S. SELVARAJAN :
Sri GOMATHI SANKARA DIKSHITHAR : } Will the Hon. the Chief Minister be pleased to state the position of School Assistants and Deputy Inspectors with more than five years service under the former District Boards when the Schools were taken over by Government on 1st April 1966?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There are no posts of Deputy Inspectors under the control of the former District Boards. The question of integrating the services of School Assistants and other allied matters is separately under the consideration of the Government.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், ஜில்லா போர்டிலே பணி புரிந்து இருக்கின்ற ஆசிரியர்களுடைய தகுதிக்குத் தக்க விதம், மேல் உத்தியோகம் கொடுக்கவில்லை என்கிற புகார் அரசாங்கத் திற்கு வந்திருக்கிறதா ? வந்திருந்தால், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் என்ன என்று அறிவிக்கலாமா ?